<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 21.08.2025

**அசல் வழக்கு எண்.120/2022**

**பி.சா.1 – பாக்கியம், த/பெ.சின்னப்பன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் பிஏ படித்துள்ளேன். என்ன பணி புரிகிறீர்கள் என்றால் நான் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் என்னுடைய சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார்கள் அதனை தடுக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்து உள்ளார்கள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் 14 ½ செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்தேன். மொத்த விசாரணம் எவ்வளவு என்றால் 21 செண்டுகள் ஆகும். மேற்படி 21 சென்ட் உங்கள் தந்தை வழி பாட்டனார் அவர்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவருடைய பெயர் என்னவென்றால் ஆரோக்கியம் ஆகும்.ஆரோக்கியம் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அவருக்கு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் ஆவார்கள். என்னுடைய பெரியப்பா பெயர் சீமோன் ஆகும். எங்களுடைய அத்தையின் பெயர் தெரியவில்லை. சீமோன் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் குழந்தைகள் இருந்தார்கள் ஆனால் இறந்து விட்டார்கள் யார் என்று எனக்குத் தெரியாது. வழக்கில் ஒரு குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்து உள்ளீர்கள் அந்த வழக்கு என்ன ஆனது தெரியுமா தள்ளுபடி செய்யப்பட்ட விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண். 499 ந.க.எண். 1396/2009 ஆனது கடந்த 10.02.2010 உத்தரவின் படி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் தெரியாது. பட்டா ரத்து செய்யப்பட்டது உங்களுக்கு நன்கு தெரியும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. 3 ¼ சென்ட்

உங்களுடைய தாத்தா விற்று விட்டார் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1 ¼ செண்ட் விற்றது ஏகாளம் அல்லது அவரது தம்பியா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது பட்டா எண் 499 உங்கள் பெயரில் இல்லை என்றால் சரியில்லை. பட்டா எண் 499 தானாக கொடுத்தார்களா அல்லது நீங்கள் மனு கொடுத்ததின் பெயரில் கொடுத்தார்களா என்றால் நான் மனு கொடுத்ததின் பெயரில் தான் கொடுத்தார்கள். எப்பொழுது மனு கொடுத்தீர்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மனு கொடுக்கும் பொழுது என்னென்ன ஆவணங்கள் வைத்து கொடுத்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. உங்களுடன் பிறந்தவர்கள் முறையே இமானுவேல், ஜான்பாஸ்கோ, ஆரோக்கியமேரி, புஷ்பா ஆகியோர் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உங்கள் தந்தை மொட்டையன் என்கிற சின்னப்பன் என்றால் அவருடைய பெயர் மொட்டையன் இல்லை சின்னப்பன் மட்டுமே ஆகும். வழக்கு சொத்து உங்கள் தாத்தாவுக்கு பாத்தியப்பட்டு பிறகு உங்கள் அப்பாவிற்கு வந்து அதன் பிறகு அவரது வாரிசுகளான உங்களுக்கு வந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தினை அனுபவித்து வருவதாக சொல்கிறீர்கள் எப்படி அனுபவித்து வந்தீர்கள் என்றால் வேலிக்கத்தான் மரம் நட்டு அனுபவித்து வந்தோம். அதனை உங்கள் வழக்கிலோ வாக்குமூலத்தில் சொன்னீர்களா என்றால் சொல்லி உள்ளேன். 5ம் பிரதிவாதி பாட்டனர் ஏகலான் அவரது தந்தை பெயர் தோட்டிகுள்ளன் என்றால் ஏகலான் என்பவர் தெரியும் என்பவர் தோட்டிகுள்ளன் பெயர் தெரியாது. மேற்படி தோட்டிகுள்ளன் மகன்கள் தான் ஆரிகம், வாவேந்தரம் என்கிற பிலவேந்திரம், ஏகலான், சின்னப்பன் ஆகியோர் என்றால் அவர்களது வம்சாவழி எனக்குத் தெரியாது. முத்து என்பவருக்கு மூன்று பேர் வாரிசுகள் அவர்கள் முறையே பரிபூரணம், ஆசீர்வாதம், சந்தனமேரி இவர்களை தெரியுமா என்றால் தெரியும். முத்துவின் மகன் தான் 2ம் பிரதிவாதி சகாயம் என்பவரது கணவர் அதே போல் 5ம் பிரதிவாதி ஜார்ஜ் என்பவரது தந்தை தான் ஆசிர்வாதம் என்றால் சரிதான். பரிபூரணம், ஆசிர்வாதம், சந்தனமேரி ஆகியோர் மூவருக்கு இடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு முறையிலான பாகப்பிரிவினைப்படி ஆசிர்வாதத்திற்கு

ஒதுக்கப்பட்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரி இல்லை. உங்கள் தந்தை வழி பாட்டனார் விற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் வாங்கியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. ரோட்டுக்காக 4 ¾ ல் செண்ட் எடுத்ததாக சொல்கிறீர்கள் அதற்கான ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் சிட்டா தாக்கல் செய்து கொண்டீர்கள் அடங்கல் கணக்கு பசலி எண் 1390 மற்றும் 1394 காண அடங்களில் பட்டாதாரர் பெயர் உள்ளதா என்றால் என்னால் சொல்ல முடியாது. நீங்கள் 13 9 1991 தேதியிட்ட வரி ரசீது போட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் பட்டா எண் 744 என்று குறிப்பிடப்பட்டுள்ளது அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த பட்டா எண் யாருடைய பெயரில் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் 08.05.2007 தேதியில் ஒரு ரசீது தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். சர்வே எண் 508/6C, 508/6D என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். அவ்வாறு நீங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. உங்கள் பெயரில் பட்டா எண் 499 வழங்கப்பட்டது என்று சொல்கிறீர்கள் அதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. ரோடுக்காக 4 ¾ செண்ட் எடுத்ததாக சொல்கிறீர்கள் அந்த ரோடுக்காக எடுத்தது உங்கள் பட்ட 499 வழங்கப்பட்டதற்கு முன்பா அல்லது அதற்குப் பின்பா என்றால் எனக்கு தெரியாது. உங்களுடைய வம்சாவழியினர் கட்டை ஆரோக்கியமும் பிரதிவாதிகள் வம்சாவழி ஆரிக்கம் என்பவர்களுடைய வம்சாவழியும் வெவ்வேறானவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜான் பாஸ்கோ என்கிற மாதா கோவிலுக்கு நிலத்தை தானமாக உங்களுடைய வம்சாவழியினர் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து உங்களுக்கு சொந்தமானது என்று காட்டுவதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்க்கும் உங்களுக்கும் எந்த

ஒரு உரிமையும் கிடையாது அனுபவமும் கிடையாது என்றால் சரியில்லை. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி அவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று சொன்னால் சரியில்லை. அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியில்லை. உங்கள் சகோதரர் மற்றும் சகோதரிகளிடம் உங்களுக்கு பேச்சு வார்த்தை உண்டா என்றால் பேச்சு வார்த்தை உண்டு. வழக்கு சொத்தில் உங்களுடைய சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியில்லை. நீங்கள் தாக்கல் செய்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் கூரை வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால்வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் கூரை வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியில்லை. வழக்கில் உரிமை மூலம் குறித்து உட்பூசல் நிலவுகிறது. ஆகவே உரிமை மூல பரிகாரம் கோராமல் உறுத்து கட்டளை பரிகாரம் கோரியது சரியில்லை என்றால் தவறு. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியில்லை. வழக்கில் கோரிய பரிகாரம் வழங்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.